## நாமக்கல் - டிரினிடி மகளிர் கல்லூரியில் உலக அறிவியல் தின விழா

நாமக்கல் - டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் கணிதவியல் மற்றும் வேதியியல் துறைகளின் சார்பில் "உலக அறிவியல் தின விழா" 10.11.2022 அன்று கல்லூரி வளாகத்தில் கொண்டாடப்பட்டது.

ஒரு நாடு வளர்ச்சியடைந்த நாடு என்பது அறிவியல் வளர்ச்சியினை கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. எந்த ஒரு விஞ்ஞான வளர்ச்சியுமே நாட்டு மக்களுக்கு நன்மையினைத் தருவதாக மட்டுமே இருக்க வேண்டும். அவர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் எதுவுமே அறிவியல் வளர்ச்சி என நாம் கருத முடியாது. அமைதி மற்றும் வளர்ச்சி ஆகியவையே இந்நாளின் முக்கிய நோக்கமாகும். இந்நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை ஏற்படுத்தும் வகையில் இக்கல்லூரியில் இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்விற்கு கல்லூரித் தலைவர் பி. எஸ்.கே. செங்கோடன் தலைமை தாங்கினார். செயலர் கே. நல்லுசாமி முன்னிலை வகித்தார். செயல் இயக்குநர் அருணா செல்வராஜ் இந்நிகழ்வினை துவக்கி வைத்தார். கல்லூரி முதல்வர் எம். ஆர். லட்சுமிநாராயணன் அனைவரையும் வரவேற்றார். இயக்குநர் உயர்கல்வி அரசுபரமேசுவரன் வாழ்த்துரை வழங்கினார்.

இதில் கணிதவியல் துறையில் கணிதக் கலை, கணித வினாடி வினா மற்றும் பழைய கணிதம் & புதுக்கணிதம் என்ற தலைப்பில் கருத்து விவாத நிகழ்வு நடைபெற்றது.

வேதியியல் துறையின் சார்பில் இயற்கை பாதுகாப்பு என்ற நோக்கத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது. இதில் மாணவியர் சுவரொட்டி விளக்க கண்காட்சியின் மூலம் சுற்றுப்புறச் சூழலை நாம் எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தங்கள் திறமைகளை சிறப்பாக வெளிக் கொணர்ந்தனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கணிதவியல் மற்றும் வேதியியல் துறைத்தலைவர்கள் ஆர். மலர்விழி, பி. சரண்யா, என். தங்கமணி, என். சாந்தி ஆகியோர் செய்திருந்தனர்.

இந்நிகழ்விற்கான நடுவர்களாக கல்லூரிப் பேராசிரியப் பெருமக்கள் என். இளமதி, டி. கே. அனுராதா, ஆர். சாவித்திரி, பி. லட்சுமி, ஆர். சகுந்தலாதேவி, ஆர். ரூபா, கே. புனிதா, ஆகியோர் பங்காற்றினர். ஏறத்தாழ 350-க்கும் மேற்பட்ட மாணவியர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

10.11.22

Principal,
Trinity College for Women (Arts & Science),